FC

# செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
## முன்னிலை. திரு.ஆ.ர.ராகுல் நாத், இ.ஆ.ப.,

**ந.க.எண்.** 21202/2016/பஅ3 **நாள்** -25.11.2022.

---

**பொருள் -** பணியமைப்பு - செங்கல்பட்டு மாவட்டம் - ஊரக வளர்ச்சி அலகு - கருணை அடிப்படை பணி நியமனம் - மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகம், செங்கல்பட்டு - திரு.சி.சிவசக்திபாலாஜி, இளநிலை உதவியாளர் (திரு.G.சிவக்குமார், (லேட்) ஊராட்சி செயலர் 27.01.2016 அன்று பணியிடைக்காலமானவரின் வாரிசுதாரர்)- இளநிலை உதவியாளர் பணி நிலையில் 16.12.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல்.

**பார்வை -**
1. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செ.மு.ந.க.எண்.21202/2016/பஅ3 நாள் 28.11.2019.
2. வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), சித்தாமூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடித ந.க.எண்.4739/2019/அ1 நாள்.18.12.2019.
3. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித ந.க.எண்.21202/2016/பஅ3 நாள் 20.05.2020
4. அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள் 26.02.2021.
5. அரசு கடித எண்.6895/இ3/2021-5 நாள்.14.12.2021
6. அரசு இணை செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.14859/இ3/2020-2, நாள்.30.03.2021
7. தொடர்புடைய ஆவணங்கள்.

- - - - - - - -

**உத்தரவு**

ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டம், ஊரக வளர்ச்சி அலகு, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் காரணை ஊராட்சி செயலராகப் பணிபுரிந்து, 27.01.2016 அன்று பணியிடை காலமான திரு.G.சிவக்குமார் (லேட்) என்பவரின் வாரிசுதாரரான அவரது மகன் திரு.சி.சிவசக்திபாலாஜி என்பவருக்கு பார்வை 1-ல் காணும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவுப்படி, இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு, பார்வை-2 இல் காணும் கடிதத்தின்படி சித்தாமூர் ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராக 16.12.2019 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து, தற்போது பணியிட மாறுதலில் செங்கல்பட்டு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

மேற்படி தனியர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இவருக்கு அரசாணை (நிலை) எண்.80 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த் துறை நாள் 02.03.2016- இல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி இவரது பணி பார்வை-3ல் காணும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதத்தின் மூலம் பணிவரன்முறை செய்யக் கோரி கருத்துரு இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மேலும் கருத்துரு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு பரிசீலனையில் இருந்த நிலையில் பார்வை 5-இல் காணும் ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கடிதவழி விதித்தளர்வு தேவைப்படாத கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட நபர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நிலையில் அரசாணை (நிலை) எண். 48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)துறை நாள் 26.02.2021ன்படி பணி வரன்முறை செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, செங்கல்பட்டு அலுவலகத்தில் இளநிலை உதவியாளராப் பணிபுரிந்து வரும் திரு.சி.சிவசக்திபாலாஜி என்பவரது பணியினை இளநிலை உதவியாளர் பணி நிலையில் 16.12.2019 முற்பகல் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு பணி வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

***தனியர், எவ்வித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் உள்ளார் என்ற அடிப்படையில் பத்தி எண் 5.1-ன்படி வரன்முறை செய்யப்பட்டுள்ளது. விதி தளர்வு அல்லது விதி விலக்கு தேவையென பின்னர் தெரிய வந்தால் இவ்வாணை எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.***

மாவட்ட ஆட்சித்தலைவர்
செங்கல்பட்டு.

25/1/2022

பெறுநர்
திரு.சி.சிவசக்திபாலாஜி
இளநிலை உதவியாளர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகம்,
செங்கல்பட்டு.

**நகல்.**ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்ககம், சென்னை.
**நகல்.**இணை இயக்குநர் / திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, செங்கல்பட்டு.
**நகல்.**வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), சித்தாமூர் ஊராட்சி ஒன்றியம்.
**நகல்.** பிடி1பிரிவு எழுத்தர், ஊரக வளர்ச்சிப் பிரிவு.
**நகல்.**பஅ3 இருப்புக் கோப்பு.